**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.76/2021**

**2025 ஆம்** வருடம் ஜூலை மாதம் 01 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயக்குமார் | ஜாதி | : | |
| த.பெ | : | ராமையா | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 45/2025 |
| தேதி | : | 01.07.2025 | | | |

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து சர்வே எண்.1006/76 இல் உள்ள கடைகள் மற்றும் சமூதாய கூடம் ஆகியவை சின்ன அய்யம்பாளையம் கிராம மக்களுக்கு பாத்தியப்பட்ட பொது சொத்து என்றால் சரிதான். அதேபோல் அங்குள்ள முத்தாலம்மன் கோவில், கிருஷ்ணன் கோவில், விநாயகர் கோவில் ஆகியவை கிராம பொது மக்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கோவில்கள் 1992 வருடத்தில் இருந்தே இந்து அறநிலையத்துறை கட்டுப்பட்டில் உள்ளது என்றால் சரிதான். சமீபத்தில் 2024 வருடத்தில் இந்து அறநிலையத்துறையில் இருந்து மேற்சொன்ன 3 கோவில் நிர்வாகத்தையும் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் ஒப்படைக்க வேண்டும் என்று உங்களுக்கு அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். மேற்சொன்ன கோவில்களுக்கு சொந்தமான 300 பவுண் நகைகள் உங்களிடம் உள்ளது என்றால் அளவுகள் தெரியாது, 1 ஆம் வாதி ராஜேந்திரன் வசம் உள்ளது. மேற்படி நகைகளை இந்து அறநிலையத்துறைக்கு இதுநாள் வரை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவில்களுக்கு அறங்காவலர்களை நியமிப்பது தொடர்பாக இந்து அறநிலையத்துறையில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான், இந்து அறநிலையத்துறையில் இணை ஆணையரிடம் வழக்கு நிலுவையில் உள்ளது.

தாவா சொத்தான கடைகள் மற்றும் சமுதாய கூடத்திற்கும், மேற்படி கோவில்களுக்கும் சம்மந்தம் இல்லை என்றும், மேற்படி தாவா சொத்திற்கான கடைகள் மற்றும் சமுதாயகூடம் கிராம மக்களுக்கு சொந்தமான பொது சொத்து என்றால் சரியல்ல, கோவில்களுக்கும் உரிமை உள்ளது. நிலக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.5/2004 ஆக தாவா சொத்துகள் ஊர் பொது சொத்துகள் என்றும், மேற்படி கோவில்களுக்கும் தாவா சொத்துகளுக்கும் தொடர்பு இல்லை என்றும், தாவா சொத்துகளின் நிர்வாகம் சம்பந்தமாக வழக்கு நடைபெற்றது என்றால் தாவா சொத்தின் நிர்வாகம் தொடர்பாக தான் வழக்கு

நடந்தது, கோவில்களுக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று வழக்கு நடைபெறவில்லை.

தாவா சொத்துகளின் நிர்வாகத்தை ஆரம்ப காலத்தில் இருந்தே ஊர் பொதுமக்கள் சார்பாக வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் குடும்பத்தார்கள் தான் பார்த்து வருகிறார்கள் தான் வாதிகளின் குடும்பத்தார்கள் தான் பார்த்து வருகிறார்கள், 1999 அக்டோபருக்கு பிறகு தான் பிரதிவாதி தற்காலிகமாக நிர்வாகம் பார்த்து வந்தார். நீங்கள் சொல்வது உண்மை இல்லை என்றும், ஆரம்ப காலத்தில் இருந்தே தாவா சொத்தின் நிர்வாகத்தை வாதி, பிரதிவாதியின் குடும்பத்தார்கள் பார்த்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

1992 ஆம் ஆண்டு கோவில்கள் இந்து அறநிலையத்துறை வசமாக்கப்பட்ட பின்பும் தாவா சொத்துகள் ஊர் பொது சொத்துகள் என்பதால் தான் தாவா சொத்தின் நிர்வாகம் ஊர் பொதுமக்கள் சார்பாக வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் குடும்பத்தார்கள் தான் பார்த்து வருகிறார்கள் என்றால் ஊர் பொதுமக்கள் சார்பாக வாதிகளின் குடும்பத்தார்கள் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறார்கள். 1999 க்கு பிறகு தான் பிரதிவாதிகள் நிர்வாகத்தில் வருகிறார்கள். எனவே, கோவில்களுக்கும், இந்து அறநிலையத்துறைக்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சம்மந்தம் உண்டு.

தாவா சொத்துக்கு நிர்வாகம் சம்மந்தமாக மேற்படி அசல் வழக்கு எண்.5/2004 வழக்கில் சமரச தீர்ப்பாணை ஏற்பட்டு, மேற்படி சமரச தீர்ப்பாணையை வா.த.சா.ஆ.1 ஆக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன சமரச தீர்ப்பாணை ஊர் பொதுமக்களின் சம்மதத்தின் பேரில் தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன்பிறகு மேற்சொன்ன சமரச தீர்ப்பாணை படி 2017 ஆம் ஆண்டு வரை தாவா சொத்திற்கு நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது என்றால் சரியல்ல.

2017 க்கு முன்பு வரை தாவா சொத்து நிர்வாகம் தொடர்பாக எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். 2018-2019 ஆம் வருடம் தாவா சொத்தின் நிர்வாகத்தை நீங்கள் கேட்டு உங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு நீங்கள் நிர்வாகம் செய்தீர்கள் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor